


நாகை மாவட்டம் நாகூர் தர்கா கந்தூரி திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு கூட டம் நாகூரில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட கழக செயலாளர், என் கௌதமன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சி தலைவர் ப. ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ், நாகை சட்டமன்ற உறுப்பினர் முகமதுஷாநவாஸ், அறங்காவலர் காஜிஹுசைன்சாஹீப், மாநில மீனவர் அணி துணை செயலாளர் சாகுல் ஹமீது,மனோகரன், சிறுபான்மை அலை மாநில துணை செயலாளர் சாகுல் ஹமீது நாகை நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, துணைத் தலைவர் எம்.ஆர். செந்தில்குமார் மற்றும் தார்கா டிரஷ்டிகள் உள்ளனர்.



தி.மு.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (எஸ்.ஐ ஆர்) கொண்டுவந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தை கண்டித்து தி.மு.க. தலைமையிலான கூட்டணி கட்சிகளில் சார்பில் மாவட்ட தலைநகரங்களில் நாளை நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பான நாகை மாவட்ட தி.மு.க சார்பில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நாகையில் மாவட்ட கழக செயலாளர் என் கௌதமன் தலைமையில் நடைபெற்றது. இதில் நாகை மாலி எம்.எல்.ஏ. மற்றும்கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”

# திருப்பூர் கிழக்கு மாவட்டத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், நவ.10-

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டும் என்று மாவட்ட கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: தலைமை கழக ஆணைக்கிணங்க தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மாவட்ட கழகப் பொறுப்பாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் நாளை (11.11.2025-செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் தாராபுரம், அண்ணா சிலை அருகில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகள் சார்பில் “மாபெரும் கண்டனப் ஆர்ப்பாட்டம்” நடைபெறுகிறது.

மேற்கண்ட சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R)யை நாட்டின் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் தொடக்கத்திலிருந்தே எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய அரசின் கைப்பாவையாகவும், எதேச்சாதிகாரப் போக்குடனும் தேர்தல் ஆணையம் செயல்பட்டு தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிப்பு தெரிவித்த போதிலும் இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ளது.

விவசாயிகளாக மேலும், தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழையின் உச்ச காலமான, கனமழை மற்றும் மோசமான வானிலை எதிர்பார்க்கப்படும் காலத்தில் தமிழ்நாடு வாக்காளர்களில் பெரும்பாலோர் கிராமப்புற மக்களாக இருப்பதால் Enumeration From களைப் பெற்று நிரப்பி, திருப்பி அளிக்க நேரம் கிடைக்காது, இந்த செயல் முறையில் பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் நீக்கப்படுவர். அதோடு வருவாய்த் துறையும் கனமழையால் எழும் சூழ்நிலைகளைக் கையாள்வதில் ஈடுபட வேண்டும். எனவே இந்த காலம் Enumeration க்கு உகந்த காலம் இல்லை, கட்சிகள் தனித்தனியே அறிக்கை விடுத்தும், இந்த S.J.R ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல என்று மதச்சார்பற்ற கூட்டணிக் அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் எதிர்ப்பார்த்தவாறே S.I.R 04.11.2025 ஆம் தேதியிலிருந்து இன்று வரை களத்தில் பெரும்பாலான வாக்காளர்கள் நீக்கப்படும் அச்சத்தை உறுதிப்படுத்துகிறது. பெரும்பாலான இடங்களில் BLOக்கள் இன்று வரை கணக்கீட்டு படிவத்தை (Enumeration Form) தரத் துவங்கவில்லை.

BLOக்களும் BLA2க்களுக்கும் இடையே சரியான தகவல் தொடர்புகளை ஏற்படுத்த படவில்லை. அவர்கள் ஒருங்கிணைக்கபட வில்லை. சில இடங்களில், குறிப்பாக திருப்பூர் மாவட்டத்தில் BLOக்கள் Enumeration Formஐ ஒரு நாளிலேயே பூர்த்தி செய்து தர வலியுறுத்துகிறார்கள்.

தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2002/2005 வாக்காளர் பட்டியல்கள் முழுமையற்றதாகவும், குழுப்பம் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளன.

எனவே இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம். தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.i.R) கொண்டு வந்துள்ளதை கண்டித்து “மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டடணி” சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுசமயம் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழகத்தின் செயல் வீரர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், தோழர்கள் மற்றும் பொது மக்களும் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் வழிவகை செய்து இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரை! தஞ்சை வடக்கு – மத்திய மாவட்டங்களில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனைக் கூட்டங்கள்!

## அமைச்சர் கோவி.செழியன் – கழகத்தினர் பங்கேற்பு!

தஞ்சாவூர் நவ.9-

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் தஞ்சை வடக்கு மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச் சாவடி“ ஆலோசனைக் கூட்டத்தில் பி.எல்.ஏ2, பி.டி.ஏ -க்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் தஞ்சாவூர் மஹாராஜா மஹாலிலும், தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கும்ப கோணம், செட்டிமண்டபத்தில் உள்ள மஹாலெட்சுமி திருமண மண்டபத்திலும் நடைபெற்றது.

இக்கூட்டங்களில் கழக முதன்மைச் செயலாளரும், டெல்டா மண்டல பொறுப்பளாருமான அமைச்சர் கே.என்.நேரு மற்றும் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றி னார்கள்.

கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது தமிழ்நாட்டின் மீது தீராத வன்மம் கொண்டு ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்த துடிக்கும் ஒன்றிய பாசிச பாஜக அரசையும், அதற்கு துணை போகும் அடிமை கூட்டங்களின் மோசடி செயல்களையும் முறியடிக்க வேண்டும் என்றும், அவர்களின் அடுத்த சதியாக “சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தம் (SIR)” என்னும் பெயரில் நிகழ்த்த உள்ள சதி செயல்களையும், அதனை முறியடிப்பதற்கான செயல் திட்டங்களையும் அப்போது விளக்கியும், நம் தலைவர் தலைமையிலான கழக ஆட்சி மீண்டும் அமைய வேண்டும். அதற்கு தஞ்சை வடக்கு மற்றும் மத்திய மாவட்டங்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் எனவும் குறிப்பாக, பாபநாசம் கும்பகோணம் ஒரத்தநாடு ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நம் பாக முகவர்களுக்கும், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கும் ஆற்ற வேண்டிய தேர்தல் களப்பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி சிப்புரையாற்றி னார்.

இந்த ஆலோசனைக் கூட்டங்களில் மாவட்டச் செயலாளர்கள், துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, ச.முரசொலி எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், மாநகரச் செயலாளர்கள் சு.ப.தமிழழகன், சண். இராமநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமசந்திரன், து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஸ்ணசாமி, குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து,

மரு.அஞ்சுகம் பூபதி, ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, எஸ்.ஜி. அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, க.நசீர்முகமது, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி, ஜெயலெட்சுமி நடராஜன், உள்ளிட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள்,

மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ2, பி.டி.ஏ உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில்

# ஈரோட்டில் எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட தி.மு.க. அறிவிப்பு!

ஈரோடு, நவ.10-

ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க அறிக்கை வருமாறு:

தலைமைக் கழக அறிவிப்பின்படி தி.மு.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்தும் இந்த (S.I.R) சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக மாறி, எதேச்சாதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம் கொண்டுவந்துள்ளதை கண்டித்தும் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணிகள் இணைந்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்டம் சார்பில் 11.11.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் ஈரோடு காளை மாட்டு சிலை, சிம்னி ஹோட்டல் அருகில் நடைபெறவுள்ளது.

எனவே, இந்நிகழ்ச்சியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஈரோடு வடக்கு, தெற்கு, மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக்கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BDA, BLC உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. கேட்டுக்கொண்டுள்ளது.

# பெரம்பலூர் - லப்பைக்குடிக்காட்டில் உமர் முக்தார் மறைவு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் - வீ.ஜெகதீசன் அஞ்சலி!

பெரம்பலூர், நவ.10-

பெரம்பலூர் மாவட்டம், லப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளரும் பேரூராட்சி மன்றத் தலைவருமான ஏ.எஸ்.ஜாகீர் உசேன் மகன் உமர் முக்தார் என்பவர் உடல் நலக் குறைவால் இறந்து விட்டார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இறந்த உமர் முக்தார் உடலுக்கு போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீ சன் மற்றும் கழக நிர்வாகி கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், லப்பைக்குடிக்காடு பேரூர் கழகச்செயலாளரும் லப்பைகுடிகாடு பேரூராட்சி தலைவருமான ஏ.எஸ்.ஜாகீர் உசேன் மகன் உமர் முக்தார் (25) என்பவர் உடல் நலக்குறைவால் காலமானார்.

லப்பைக்குடிக்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த உமர் முக்தார் உடலுக்கு போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இறுதி ஊர்வலத்தில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி முன்னெடுப்பில் ”உயர்கல்வியில் தமிழ்நாடு என்ற தலைப்பின் கீழ் தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட 15 அரசு/அரசு உதவி பெறும்/ தனியார் கல்லூரிகளை தேர்ந்தெடுத்து பேச்சு போட்டி நடத்த திட்டமிட்டு முதல் கட்டமாக தஞ்சை பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரியில் 202 மாணவிகளிடம் பேச்சு போட்டி நடத்தி அதில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவிகளுக்கும் மற்றும் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவியர் அனைவருக்கும் ச.முரசொலி எம்.பி பரிசுகள் வழங்கி பாராட்டினார். உடன் கல்லூரி முதல்வர், கழக முன்னோடிகள், மாணவியர்கள் உள்ளனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியம் கல்பாரப்பட்டி , சேனைப்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்குப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சு.சதீஷ்குமார் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தார். இதில் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




சூளகிரி ஒன்றியம் கிருஷ்ணகிரி மாவட்டம் கோனேரிப்பள்ளி ஊராட்சி முனீஸ்வர் நகர், கோட்டராலப்பள்ளி கிராமத்தில் ஊராட்சி நிதியில் 2025 –2026 திட்டத்தில் ரூபாய் 8,75,000 சிமெண்ட் சாலை மற்றும் நல்லகான கொத்தப்பளி கிராமத்தில் சிங்கையான் ஏரியில் ரூ.9,98,000 இலட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம் அமைக்கும் பணியினை கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் வீரா ரெட்டி , ஒன்றிய செயலாளர்கள் முனி வெங்கடசாமி(எ)அப்பையா, பாக்யராஜ் , கலை இலக்கிய பேரவை ஒன்றிய துணை அமைப்பாளர் வெங்கடேஷ், மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.